## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – கல்வி – விடுதிகள் – 2017–18–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் நகர்புறங்களில் 5 கல்லூரி விடுதிகள் புதிதாக துவங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த்துறை

அரசாணை (நிலை) எண்.03

நாள். 02.01.2018
ஹேவிளம்பி, மார்கழி 18
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது :

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண். சி1/4834/2017,
நாள். 16.08.2017 மற்றும் 30.10.2017.

* * * * * * * *

**ஆணை:**

13.07.2017 அன்று சட்டமன்றப் பேரவையில் 2017–2018 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் நகர்ப்புறங்களில் 5 கல்லூரி விடுதிகள் 1 கோடியே 67 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் செலவில் புதிதாக துவக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

2. இவ்வறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியரின் நலனுக்கென மொத்தம் 1338 விடுதிகள் இயங்கி வருகின்றன என்றும் புதிதாகத் துவங்க உத்தேசிக்கப்பட்ட 5 கல்லூரி விடுதிகளின் பெயர் விவரத்தினை பின்வருமாறும் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | மாவட்டம் | விடுதியின் பெயர் |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | | |
| 1 | திருச்சிராப்பள்ளி | கல்லூரி மாணவர் விடுதி, மணிகண்டம் |
| 2 | கிருஷ்ணகிரி | கல்லூரி மாணவர் விடுதி, ஒசூர் |
| 3 | வேலூர் | கல்லூரி மாணவியர் விடுதி, அரக்கோணம் |

| | | |
|---|---|---|
| 4 | பெரம்பலூர் | கல்லூரி மாணவியர் விடுதி, வேப்பூர் |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி | | |
| 5 | தருமபுரி | கல்லூரி மாணவர் விடுதி, பாலக்கோடு |

3. மேற்காணும் 5 புதிய கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளை 100 மாணவ, மாணவியர் எண்ணிக்கை கொண்ட விடுதிகளாக துவங்கி செயல்படுத்திட ஒவ்வொரு கல்லூரி விடுதிக்கும் கீழ்க்கண்ட பணியிடங்கள் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது என்பதால் இப்பணியிடங்களை தோற்றுவிக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் வேண்டியுள்ளார்.

| வ. எண். | பதவி விவரம் | 2017ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட ஊதியம் | தலா ஒரு விடுதிக்கான பணியிடங்கள் எண்ணிக்கை | ஐந்து விடுதிகளுக்கான பணியிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பி.எட்., பட்டதாரி போதகக் காப்பாளர்/ காப்பாளினி | குறைந்தபட்ச ஊதியம் ரூ.36,400/– (நிலை–16, ரூ.36,400 – 1,15,700) | 1 | 5 |
| 2 | சமையலர் மற்றும் உதவி சமையலர் | குறைந்தபட்ச ஊதியம் ரூ.15,700/– (நிலை–1, ரூ.15,700–50,000) | 2 | 10 |
| 3 | காவலர்/ ஏவலர் | குறைந்தபட்ச ஊதியம் ரூ.15,700/– (நிலை–1, ரூ.15,700–50,000) | 1 | 5 |
| 4 | துப்புரவு பணியாளர் | மாதம் ரூ.3000/– தொகுப்பு ஊதியத்தில் | 1 | 5 |

4. மேற்குறிப்பிடப்பட்ட 5 புதிய கல்லூரி விடுதிகள் துவங்குவதற்கான தொடரும் செலவினம் ரூ.1,46,54,100/- மற்றும் தொடரா செலவினம் ரூ.19,78,750/– ஆக மொத்தம் ரூ.1,66,32,850/- (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தாறு இலட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு ஆணையர் கோரியுள்ளார்.

5. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, 100 மாணவர்கள் தங்கும் வகையில் 5 கல்லூரி மாணவ, மாணவியருக்கான விடுதிகளை (4 பிற்படுத்தப்பட்டோர் + 1 மிகப்பிற்படுத்தப்பட்டோர் ) மேலே பத்தி 2–இல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் புதிதாக துவங்கிடவும், இவ்விடுதிகளை துவக்குவதால் ஆண்டொன்றிற்கு தேவைப்படும் மொத்த செலவினத்தில் இணைப்பு I-இல் குறிப்பிடப்பட்டுள்ள தொடர் செலவினம் ரூ.1,46,54,100/– மற்றும் இணைப்பு II-இல் குறிப்பிடப்பட்டுள்ள தொடரா செலவினம் ரூ.19,78,750/– சேர்த்து மொத்தம் ரூ.1,66,32,850/-ற்கு

(ரூபாய் ஒரு கோடியே அறுபத்தாறு இலட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே புதிதாக துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ள 5 கல்லூரி விடுதிகளுக்கு ஒரு விடுதிக்கு தலா ஒரு காப்பாளர் / காப்பாளினி, 2 சமையலர்கள், ஒரு காவலர் மற்றும் ஏவலர் என 20 பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் , 2017 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகிதங்களின் அடிப்படையிலும், ஒரு விடுதிக்கு ஒரு துப்புரவு பணியாளர் என்ற முறையில் 5 பணியிடங்களை ரூ.3000/– (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) தொகுப்பூதிய அடிப்படையிலும் தோற்றுவித்து துப்புரவாளர் பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் அல்லது வெளிமுகமை மூலம் நிரப்பவும் அரசு ஆணையிடுகிறது.

7. மேற்காணும் பணியிடங்களில் பணியமர்த்தப்படும் பணியாளர்கள் அவர்கள் நியமன நாள் முதல் சம்பளம் மற்றும் இதர படிகளைப் பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

8. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் இணைப்பு I மற்றும் II-இல் உள்ளவாறு பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்</u> **(ரூ.1,33,18,080/–)**

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – AA – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் –01 சம்பளங்கள்".

(த.தொ.கு. 2225–03–277–AA-0105)

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி</u> **(ரூ.33,14,770/–)**

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – KA – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள்–01 சம்பளங்கள்".

(த.தொ.கு. 2225–03–277–KA-0105)

9. மேலே பத்தி 8–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு 'புதுத் துணைப்பணி' குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு / பொது–I) த்துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் கொண்டு வரப்பட்டு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாகக் கணக்கிட்டு 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A" யினை பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு–செலவு/ பொது-I) த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், இக்கூடுதல் செலவினத்தினை 2017–18 ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய கருத்துருவினை நிதி (பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்)த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர்

மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. மேற்காணும் 5 புதிய கல்லூரி விடுதிகளும் முறையாக துவக்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11.இவ்வரசாணை நிதித்துறையின் கோப்பு எண்.64960/பி,மிபி(ம)சிந/26.12.2017 அ.சா.கு.எண்.67435/மை.ம.ஆ.பி/2017, நாள். 28.12.2017ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 2337 (இரண்டாயிரத்து முன்னூற்று முப்பத்தேழு).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஆ.கார்த்திக்
அரசு செயலாளர்

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், சென்னை– 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நல ஆணையர், சென்னை– 5.
இயக்குநர், சிறுபான்மையினர் நலம், சென்னை–2.
மாநில கணக்காயர், சென்னை–18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 1),
சென்னை–18. (பெயரில்).
மாநில கணக்காயர், (தணிக்கை–2),
சென்னை–18. (பெயரில்).
சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை –5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

<u>நகல்</u> :
மாண்புமிகு அமைச்சர்
(பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறைச் செயலர்
அவர்களின் முதுநிலை தனிச்செயலர், சென்னை–9.
நிதி (பி.மி.பி./வ.செ.பொது I & II)த் துறை, சென்னை–9.
நிதி (மை.ம.ஆ.பி)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

2/1/2018
பிரிவு அலுவலர்
2/1/18